செ.கு.எண்: 18 நாள்: 14/01/2013

## மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் **செல்வி ஜெ ஜெயலலிதா** அவர்களின்

## இரங்கல் செய்தி – 14.1.2013

பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சரும், அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் வேலூர் மாநகர மாவட்ட சிறுபான்மையினர் நலப் பிரிவு செயலாளருமான திரு. அ.முஹம்மது ஜான் அவர்களின் தாயார் திருமதி ஜெ.பல்கிஸ்பேகம் அவர்கள் உடல் நலக் குறைவு காரணமாக 14.1.2013 அன்று காலமானார் என்ற செய்தியை அறிந்து மிகுந்த வருத்தம் அடைந்தேன்.

தனது தாயாரை இழந்து வாடும் திரு. அ.முஹம்மது ஜான் அவர்களுக்கும், அவரது குடும்பத்தினர் அனைவருக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்வதோடு, அன்னாரது ஆன்மா இறைவன் திருவடி நிழலில் இளைப்பாற எல்லாம் வல்ல இறைவனை பிரார்த்திக்கிறேன்.

**ஜெ ஜெயலலிதா**
தமிழக முதலமைச்சர்

வெளியீடு, இயக்குநர்,
செய்தி, மக்கள் தொடர்புத் துறை,
சென்னை-9